# Dinakaran




காஞ்சிபுரம் சங்கரா பல்கலைக்கழகத்தின் இயற்பியல் துறை சார்பில் நடந்த ஆராய்ச்சி கருவிகளின் தொழிற்நுட்பம் குறித்த தேசிய அளவிலான கருத்தரங்கில் மத்திய அறிவியல் உபகரண நிறுவன முதன்மை விஞ்ஞானி சீனிவாஸ் கோட்டா, செயின்ட் பீட்டர்ஸ் ஆராய்ச்சி முதல்வர் குணசேகரன் கலந்து கொண்டு பேசினர். அருகில், துணைவேந்தர் விஷ்ணுபோத்தி, துறை தலைவர் வெங்கட்ரமணன்.

## காஞ்சிபுரம் சங்கரா பல்கலையில் தேசிய அளவிலான கருத்தரங்கம்

காஞ்சிபுரம், நவ.2: காஞ்சிபுரம் சங்கரா பல்கலைக்கழகத்தின் இயற்பியல்துறை சார்பில், ஆராய்ச்சி கருவிகளின் தொழிற்நுட்பம் குறித்த தேசிய அளவிலான கருத்தரங்கம் பல்கலைக்கழக வளாகத்தில் நேற்று முன்தினம் நடந்தது.

பல்கலைக்கழக துணைவேந்தர் விஷ்ணுபோத்தி தலைமை வகித்தார். இயற்பியல் துறை தலைவர் வெங்கட்ரமணன் வரவேற்றார். சென்னை தரமணியில் உள்ள மத்திய அறிவியல் உபகரண நிறுவன முதன்மை விஞ்ஞானி சீனிவாஸ் கோட்டா, செயின்ட் பீட்டர்ஸ் ஆராய்ச்சி முதல்வர் குணசேகரன் ஆகியோர் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு இயற்பியல் துறையின் வளர்ச்சி, பயன் குறித்து விரிவாக பேசினர்.

இதில், பல்கலைக்கழக அறிவியல் டீன் ஜெயலட்சுமி மற்றும் பல்வேறு மாநிலங்களை சேர்ந்த ஆசிரியர்கள், மாணவர்கள் கலந்து கொண்டனர். முடிவில் பேராசிரியர் ராகவேந்திரன் நன்றி கூறினார்.

# Dinamani

## இயற்பியல் தொழில்நுட்ப கருத்தரங்கம்

**காஞ்சிபுரம், நவ. 1:** காஞ்சிபுரம் சங்கரா பல்கலைக்கழகத்தில் இயற்பியல் ஆராய்ச்சி தொழில்நுட்பக் கருத்தரங்கம் சனிக்கிழமை நடைபெற்றது. காஞ்சிபுரம் சங்கரா பல்கலைக்கழக வளாகத்தில் நடைபெற்ற இந்தக் கருத்தரங்கத்துக்கு, துணைவேந்தர் விஷ்ணுபோத்தி தலைமை வகித்தார்.

சென்னை தரமணி மத்திய அறிவியல் உபகரண நிறுவன முதன்மை விஞ்ஞானி சீனிவாஸ் கோட்டா, செயின்ட் பீட்டர் ஆராய்ச்சி நிலைய டீன் குணசேகரன் ஆகியோர் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு இயற்பியல் ஆராய்ச்சி தொழில்நுட்பம் குறித்து மாணவர்களிடம் விவரித்தனர்.

இதில் பல்கலைக்கழக அறிவியல் டீன் ஜெயலட்சுமி, இயற்பியல் துறைத் தலைவர் கே. வெங்கட்ரமணன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். இந்தக் கருத்தரங்கில் பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த 100-க்கும் மேற்பட்ட ஆசிரியர்கள், ஆராய்ச்சி மாணவர்கள் கலந்து கொண்டனர்.

# Eenadu

## 'చంద్రశేఖరేంద్ర'లో జాతీయ సదస్సు

**కాంచీపురం, న్యూస్‌టుడే:** కాంచీపురం సమీపంలో ఏణాత్తూరులో ఉన్న చంద్రశేఖరేంద్ర సరస్వతీ విశ్వ విద్యాలయంలో పరిశోధన ఉపకరణాలపై జాతీయ సదస్సు జరిగింది. ఫిజిక్స్ శాఖ ఆధ్వర్యంలో ఏర్పాటైన ఈ సదస్సుకు విశ్వ విద్యాలయ ఉపకులపతి వీఎస్ విష్ణుపొత్తి నేతృత్వంలో జరిగింది. ఈ సదస్సులో ముఖ్య అతిథిగా సెంట్రల్ సైంటిఫిక్ ఇన్‌స్ట్రుమెంట్స్ ఆర్గనైజేషన్ (చెన్నై) చీఫ్‌సైంటిస్ట్ శ్రీనివాస్ కోటా పాల్గొని ప్రస్తుత పరిస్థితుల్లో పరిశోధనల పరికరాల ఉపయోగం గురించి ప్రసంగించారు. అలాగే సెయింట్ పీటర్స్ రిసెర్చి డీన్ గుణ శేఖరన్ ఫిజిక్స్ రిసెర్చి టెక్నాలజీ గురించి ప్రసంగించారు. ఈ సదస్సులో వివిధ రాష్ట్రాలకు చెందిన సుమారు వందమంది ఉపాధ్యాయులు, పరిశోధక విద్యార్థులు పాల్గొన్నారు. సదస్సులో ఆహుతులకు ఫిజిక్స్ విభాగ డీన్ కే.వెంకటరామన్ స్వాగతం పలికారు. ఏ.విజయలక్ష్మి తదితరులు పాల్గొని తమ అమూల్యమైన సలహాలను అందజేశారు. సదస్సుకు సంబంధించిన ఏర్పాట్లను అసిస్టెంటు ప్రొఫెసరు రాఘవేంద్రన్ తదితరులు సమీక్షించారు.